மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது, அனைவருக்கும் உயர் கல்வி தர வேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த 6 ஆண்டு காலத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 21, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள் 24, பொறியியல் கல்லூரிகள் 4, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 16 என்று 65 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறது. மேலும், மாணவர்களின் சேர்க்கை சதவிகிதம் மற்றும் கூடுதலாக அரசு கலைக் கல்லூரிகளில் மாணவர்கள் சேருகின்ற நிலையை அறிந்து, இந்த ஆண்டும் அரசுக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளிலும், 20 சதவிகித மாணவர்கள் சேர்க்கைக்கான உத்தரவையும், மாண்புமிகு அம்மாவினுடைய வழி நடக்கின்ற அரசு, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாருடைய உத்தரவின் பேரிலே அனுமதி தந்திருக்கிறது. அதற்கும் மேலாக, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்றாற்போல், வரக்கூடிய காலகட்டங்களிலே ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் கல்லூரிகள் அவசியம் தேவை என்றால், அதையும் நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

215—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9974—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2017 ஜூலை 18]

அந்தியூர் தொகுதி, பிரம்மதேசம் ஊராட்சி, காட்டுப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய மக்கள்தொகைக்கேற்ப, 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையினால் விதிகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினால் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் வளர்ச்சிக்காக அணையா விளக்கை ஏற்றிவைத்து, மறைந்தும் மறையாமல் நம்மோடு வாழ்ந்து, அருளாசியை வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கியும், அம்மா அவர்கள் ஏற்றி வைத்த ஒளி விளக்கை அணைக்கத் துடிப்பவர்களை ஊதித் தள்ளி, அம்மாவின் அசல் விளக்காக, அம்மாவின் தளபதியாய், தமிழகத்தின் முதல்வராய், எளிமையின் சிகரமாய் திகழ்ந்து கொண்டிருக்கும் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆசியோடும், வாய்ப்பு வழங்கிய தங்களின் ஆதரவோடும் இங்கு பேசுகிறேன்.*

அந்தியூர் சட்டமன்றத் தொகுதியானது கிராமப்புற மக்களைக் கொண்ட, விவசாயம் மற்றும் கூலித் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். இதில் அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பிரம்மதேசம் மற்றும் வேம்பத்தி ஊராட்சிகள் பெரிய ஊராட்சிகளாகும். இம்மக்களின் நலன் கருதி மேற்படி ஊராட்சிகள் மற்றும் சுற்றுப்புற மக்கள் பயன்பெறும் வகையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால், அம்மக்களுக்கு

மிகவும் வசதியாக இருக்கும். எனவே, அதனைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே, கடந்த காலங்களில் ஒசூர் மற்றும் வெள்ளிதிருப்பூர் ஆகிய இடங்களில் இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி ஓர் அரசு மருத்துவமனைக்கு அருகில் இருக்கின்றது. வருங்காலத்தில் நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் அரசின் நிதிநிலைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது 'பரிசீலிக்கப்படும்' என்ற அறிவிப்பிற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் கடந்த 2011–2016–ல் அம்மாவின் ஆட்சியில் தனி வருவாய் வட்டமாக அறிவிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. அம்மாவின் சரித்திர சாதனைகளால், 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் வெற்றி பெற்று அமைந்த அம்மா அவர்களின் அரசு, 2016–2017 ஆம் ஆண்டில் அந்தியூர் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியுள்ளது. ஆனால், இன்னும் அந்த வட்ட மருத்துவமனைக்குத் தேவையான அனைத்துப் பிரிவு மருத்துவர்கள், தேவையான உபகரணங்கள், வசதிகள் போன்றவை செய்யப்படாமல் உள்ளன. எனவே, அந்தியூர் பகுதி மக்கள்,

2017 ஜூலை 18]

குறிப்பாக ஏழையெளிய மக்கள், பர்கூர் மலைப்பகுதி மக்கள், தங்களின் அவசர சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்காக, ஸ்கேன் போன்ற முக்கிய சோதனைகளுக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருப்பதால், மக்களுக்கென்றே என்றும் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு, அந்தியூர் வட்ட மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு அம்மாவின் அரசில் 108 அறிவிப்புகளைக் கொடுத்து, 108 ஆம்புலன்ஸ் வேகத்தைவிட வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதனைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியான அந்தியூர் அரசு மருத்துவமனை 23–9–2016 அன்று தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. கூடுதலாக 8 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல், கூடுதலாக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் படுக்கைப் பிரிவுகள், அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, மகப்பேறு சிகிச்சைக்குப் பின் உள்ள கவனிப்புப் பிரிவு என கூடுதலான வசதிகளும் தங்களுக்கு வர இருக்கின்றன என்கிற நல்ல செய்தியை அன்போடு தெரிவித்துக்கொண்டு, இந்தப் பணிகள் எல்லாம் இந்த ஆண்டே உடனடியாகத் தொடங்கப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாததாக இருந்தாலும், இப்போது டெங்கு காய்ச்சல், மர்ம காய்ச்சல், ஜிகா காய்ச்சல் என்று மக்கள் பீதியில் இருக்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுத்தாரா என்பது தெரியவில்லை; எடுக்கிறேன்*

என்று சொல்கின்றார். ஆனால், இன்று காலையில் செய்தித்தாளை நான் பார்த்தபோதுகூட, ஒரு பள்ளி மாணவன் இறந்ததாக செய்தி வந்திருக்கின்றது. இதுபோன்ற உயிரிழப்புகள் தினந்தோறும் நடப்பதாக, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாளில் தொடர்ந்து செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இது மக்களை அச்சுறுத்தும் ஒரு நிகழ்வாக இருக்கின்றது. உடனடியாக இதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சலுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தெரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். காய்ச்சல் அதிகமாக இருக்கிறது என்ற பிரச்சினையை உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் முதன் முதலில் இந்த மாமன்றத்தில் எழுப்பினார். சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடனே, அடுத்த நாளே நான் சிவகங்கை மாவட்டம், அதற்குப் பின்னால் அவர் சார்ந்திருக்கக்கூடிய பழனி, திண்டுக்கல், ஆயங்குடி பேரூராட்சி உள்ளிட்ட எல்லா இடங்களுக்கும் நேரடியாக நானும், இயக்குநர் அவர்களும் சென்று, அங்கே தேவையான பணிகளை எல்லாம் மேற்கொண்டு முழுமையாகக் கட்டுப்படுத்தி இருக்கின்றோம். (குறுக்கீடு) இங்கே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பொள்ளாச்சி, உடுமலை போன்ற பகுதிகளைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்தப் பகுதிக்கு மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் கூடுதல் இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு களத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். தலைமைச் செயலாளர் மூலமாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் முழுமையாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. தேவையான மருந்து, மாத்திரைகள் அனைத்தும் கையிருப்பில் இருக்கின்றன. அதனால் பதட்டமோ, பீதியோ அடையத் தேவையில்லை. தேவைப்படுகின்ற இடங்களில் Inter facility transfer–க்காக கூடுதல் ஆம்புலன்ஸ்கள் எல்லாம் அங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, நில வேம்புக் கஷாயம் இந்திய மருத்துவத் துறையின் மூலமாக

2017 ஜூலை 18]

கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பதட்டமோ, பீதியோ அடையத் தேவையில்லை. பொதுமக்களோடு தாங்களும் இணைந்து முழுமையாக அதிலே கண்ணும்கருத்துமாக இருந்தால்தான் கொசுக்களை ஒழிக்க முடியும். ஏனென்றால் ஒரு கிராமத்தில் காய்ச்சல் வருகின்றபோது அரசு முழுவேகத்தோடு இயங்கி கொசுக்களை முழுமையாக அழித்து காய்ச்சல் பரவுவதைத் தடுத்து விடுகிறது. ராஜபாளையத்தில் அதுபோன்றுதான் நடந்தது. இப்போது இந்தப் பருவகாலக் கட்டத்திலே எல்லா இடங்களிலும் இதற்குண்டான தாக்கம் இருக்கக்கூடிய வாய்ப்பிருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லியதன் காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் உள்ளிட்டவர்கள் முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்து வருகின்றார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு ஒரு தனி ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களையும் அவர் அறிவுறுத்தி இருக்கின்றார். ஆகவே, மிக வேகமாக கண்ணும் கருத்துமாக கவனத்தோடு உயிரிழப்பை முழுமையாக தடுக்கக்கூடிய அளவிலே வேகமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கேனும் பணிகள் தொய்வாக இருந்தாலும் நீங்கள் நேரடியாக எங்கு என்பதைத் தெரிவித்தால் உடனடியாக பணிகள் விரைவுபடுத்தப்படும். எங்கேயும் தொய்வு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.*

டாக்டர் கா. கதிர்காமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை மருத்துவத் துறைக்கு வாரி வழங்கி, அத்தனைத் திட்டங்களையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் மக்களுக்காக அதைச் செயல்படுத்துவதில் முனைப்பாக இருக்கின்றார்கள். நான் மருத்துவர் என்கிற முறையிலும், மருத்துவக் கல்லூரி முதல்வர் என்கிற முறையிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமல்லாது, அரசு மருத்துவமனை*

மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் அவர்கள் முனைப்போடு செயல்பட்டு வருகிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு இந்த வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாநகரத்தில் தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு தேனி தாலுகாவில் ஓர் அரசு மருத்துவமனை மிகவும் சிறப்பாக நோயாளிகளுடன் நடைபெற்று வந்தது. தற்போது அங்கு புறநோயாளிகள் பிரிவு மட்டும் நடைபெற்று வருகின்றது. தேனி தாலுகாவுக்கென்று தனியாக ஒரு தாலுகா மருத்துவமனை இல்லை. எனவே, இத்தனை நல்ல பல திட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்கள் ஆசியோடு, சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்ற மருத்துவச் செம்மல் அண்ணன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இத்தனை கொடைகளையும் வழங்கிய அண்ணன் அவர்கள், என்னுடைய தேனி மாநகருக்கு ஒரு தாலுகா மருத்துவமனையை அமைத்துத் தருவாரேயானால், நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். எனது தொகுதி மக்கள் சார்பாக அவருக்கு நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பேன் என்பதை நன்றியுடன் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு மருத்துவச் செம்மல் என்று பட்டம் கொடுத்திருக்கிறார். எனவே, அவருடைய கோரிக்கையைக் கொஞ்சம் கவனியுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள் முதல்வராகப் பணியாற்றிய தேனி அரசு மருத்துவக் கல்லூரிக்கு பல கோடி ரூபாயிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு அறிவிப்புகளை எல்லாம் வெளியிட்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அவரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார். அவர் சார்ந்திருக்கின்ற, அவர் பணியாற்றிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நிறைய திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாங்கள் இப்போது

2017 ஜூலை 18]

கேட்டிருக்கின்ற தாலுகா மருத்துவமனை குறித்தும் அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். உங்களுக்கு எவ்வளவு வரவேற்பு இருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். கேள்வியைக் கேளுங்கள்.*

முற்பகல் 10–40

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே டெங்கு காய்ச்சல் அதிகமாகப் பரவி, அங்கே சகிலா என்கிற 34 வயது கர்ப்பிணி பெண்ணும், நான்காம் வகுப்பு படிக்கின்ற 8 வயது மாணவனும் இறந்திருக்கின்றார்கள். அதுகுறித்து நான் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இரண்டு முறை கொடுத்திருக்கிறேன். எனது செங்கம் தொகுதி பின் தங்கிய தொகுதி. இப்போது மக்கள் டெங்கு காய்ச்சலால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, இறந்த 2 பேருடைய குடும்பங்களுக்கும் அரசின் நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அளித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின்படி, இணை இயக்குநருக்கும்,துணை இயக்குநருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியாக, கூடுதலாக இங்கிருந்து ஓர் இணை இயக்குநரும் அனுப்பி வைக்கப்பட்டு, அங்கே களப் பணிகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு மிகக் கவனத்தோடு, துரிதமாக, கண்ணும் கருத்துமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாலைகூட அனைத்து மாவட்ட இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்களோடு ஒரு விரிவான ஆய்வுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் இன்னும் வேகமாக அரசு பணிகளையாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.

திருமதி பொன். சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழும், தமிழரும் தலைநிமிர தன்னையே அர்ப்பணித்து, தவவாழ்வு வாழ்ந்த தங்கத் தாரகை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்ட திசை நோக்கி வணங்கி எனது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் அமைதி, ஆற்றலுடன், உற்சாகமான முறையில் ஆட்சியை இன்று அழகுபட நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைப் பதிவு செய்கின்றேன்.

திருச்செங்கோடு நகரின் முக்கிய தொழில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் தொழிலாகும். இப்பணிக்குக் கூலித் தொழிலாளர்கள் பெரும்பாலும் வட மாநிலங்களில் இருந்து வருகின்றனர். சிலர் வரும்பொழுதே சளி, தொற்றுநோய் காய்ச்சல் மற்றும் பிற நோயுடன் வருகின்றனர். இவர்களுக்கு சரியான சிகிச்சை அளிக்கவும், மேலும் தொற்றுநோய் காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், திருச்செங்கோடு அரசு பொது மருத்துவமனையில், இரத்த அணுக்கள் பரிசோதனை மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Blood component separator வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்; உடனடியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.